Ours bank with
Bank of Baroda

மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 114 | உள்ளூர் - 24.04.2026 | வெள்ளி | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 114 | வெளியூர் - 25.04.2026 | சனி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |

இந்த ராசிக்காரர்களுக்கு கஜலக்ஷ்மி ராஜயோகம்..!

NPS அறக்கட்டளை – 15 காலியிடங்கள்!

சி.பி.எஸ்.இ. 12–வது பொதுத்தேர்வு அறிவிப்பு!

கோடை விடுமுறை: 18000 சிறப்பு ரயில்கள்!

# ஈரானுக்கு செல்ல வேண்டாம்! இந்திய வெளியுறவு அமைச்சகம்!

டெல்லி, ஏப். 24–

இந்தியர்கள் யாரும் ஈரானுக்கு செல்ல வேண்டாம் இந்திய வெளியுறவு அமைச்சகம் அறிவுறுத்தி உள்ளது. இதைத்தொடர்ந்து, ஈரான் தலைநகர் தெஹ்ரானில் உள்ள இந்தியத் தூதரகம், இந்தியக் குடிமக்கள் விமானம் அல்லது தரைவழியாக ஈரானுக்குப் பயணம் செய்ய வேண்டாம் என்று கடுமையாக அறிவுறுத்தியுள்ளது.




தெஹ்ரானில் உள்ள இந்தியத் தூதரகம் ஓர் அறிக்கையில், "இந்தியாவுக்கும் ஈரானுக்கும் இடையே சில விமானச் சேவைகள் தொடங்கப்பட்டதாக வரும் செய்திகள் மற்றும் முந்தைய அறிவுறுத்தல்களின் தொடர்ச்சியாக, இந்தியக் குடிமக்கள் விமானம் மூலமாகவோ அல்லது தரை வழியாகவோ ஈரானுக்குப் பயணம் செய்ய வேண்டாம் என்று கடுமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள்" என்று கூறியுள்ளது. மேலும் விமானப் போக்குவரத்து சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். தற்போது ஈரானில் உள்ள அனைத்து இந்தியக் குடிமக்களும், தூதரகத்துடன் ஒருங்கிணைந்து, நியமிக்கப்பட்ட தரைவழி எல்லைப் பாதைகள் வழியாக நாட்டை விட்டு வெளியேறுமாறு அது வலியுறுத்தியது. தேவைப்படுபவர்களுக்காக தூதரகம் அவசரத் தொடர்பு எண்களையும் (+989128109115, +989128109109, +989128109102 மற்றும் +989932179359) மற்றும் மின்னஞ்சலையும் (cons.teh–ran@mea.gov.in) வழங்கியுள்ளது.

# ஹூக்ளி நதியில் படகு பயணம் சென்ற பிரதமர் மோடி..!

மேற்கு வங்காளம், ஏப். 24–

மேற்கு வங்க சட்டமன்றத் தேர்தலின் முதல் கட்ட வாக்குப் பதிவு நிறைவடைந்த சில மணிநேரங்களிலேயே பிரதமர் நரேந்திர மோடி வெள்ளிக்கிழமை காலையில், கையில் கேமராவுடன் கொல்கத்தாவில் உள்ள ஹூக்ளி நதிக்கரையில் தான் கழித்த நேரத்தையும், படகு சவாரியையும் படம்பிடித்துப் பகிர்ந்துகொண்டார்.



பிரதமர் 'X' (முன்னர் ட்விட்டர்) தளத்தில் பகிர்ந்த காட்சிகளில், அவர் ஒரு மரப்படகில் அமர்ந்தபடி கையில் கேமராவை வைத்திருப்பது தெரிகிறது; பின்னணியில் வித்யாசாகர் சேது பாலமும் காட்சியளிக்கிறது. அவர் "தாய் கங்கைக்கு" (Maa Ganga) தனது நன்றியைத் தெரிவித்தார்; மேலும் மேற்கு வங்கத்தின் வளர்ச்சிக்கும், வங்காள மக்களின் செழிப்புக்கும் பாடுபடுவதில் தான் கொண்டுள்ள உறுதியை மீண்டும் வலியுறுத்தினார். ஹூக்ளி நதியானது, கங்கை நதியின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள ஒரு துணை நதியாகும். "ஒவ்வொரு வங்காளியுக்கும், கங்கை நதி மிகச் சிறப்பானதொரு இடத்தைப் பிடிக்கிறது. கங்கை நதியானது வங்காளத்தின் ஆன்மா வழியாகவே பாய்ந்து செல்கிறது என்று கூடச் சொல்லலாம். அதன் புனித நீரானது, ஒரு முழு நாகரிகத்தின் காலத்தால் அழியாத ஆன்மாவைத் தாங்கிச் செல்கிறது. இன்று காலையில் கொல்கத்தாவில், ஹூக்ளி நதிக்கரையில் நான் சிறிது நேரம் செலவிட்டேன்; இது தாய் கங்கைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கிடைத்த ஒரு வாய்ப்பாகும்... ஹூக்ளி நதிக்கரையில் இருந்தபோது, மேற்கு வங்கத்தின் வளர்ச்சிக்கும், மகத்தான வங்காள மக்களின் செழிப்புக்கும் பாடுபடுவதில் நாங்கள் கொண்டுள்ள உறுதியை மீண்டும் வலியுறுத்தினோம்," என்று அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார். பிரதமர் மோடி நதிக்கரையில் இருந்த சில உள்ளூர் மக்களையும், படகோட்டிகளையும் சந்தித்துப் பேசினார்; மேலும் காலை நடைப்பயிற்சிக்கு வந்திருந்த மக்களைச் சந்தித்து வாழ்த்துப் பரிமாறிக்கொண்ட படங்களையும் அவர் பகிர்ந்துகொண்டார்.

# தமிழகத்தில் 1952-ம் ஆண்டு முதல் இதுவரை நடந்த சட்டசபை தேர்தல்களில் பதிவான வாக்கு சதவீதம்...? - சுவாரசிய தகவல்!

சென்னை, ஏப். 24–

தமிழக சட்டசபை தேர்தல் இன்று நடைபெற்றது. தேர்தலில் மொத்தம் 4 ஆயிரத்து 23 வேட்பாளர்கள் களமிறங்கினர். தேர்தலுக்காக தமிழகம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டன.

தமிழகத்தில் மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 5 கோடியே 73 லட்சத்து 43 ஆயிரத்து 291 ஆகும். இதில் 2 கோடியே 80 லட்சத்து 30 ஆயிரத்து 658 பேர் ஆண்கள், 2 கோடியே 93 லட்சத்து 4 ஆயிரத்து 905 பேர் பெண்கள், 7 ஆயிரத்து 728 பேர் மூன்றாம் பாலினத்தவர்கள் ஆவர்.

இந்நிலையில், தமிழக சட்டசபை தேர்தலில் 85 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளது. அதேவேளை, தமிழகத்தில் 1952ம் ஆண்டு முதல் இதுவரை நடந்த சட்டசபை தேர்தல்களில் பதிவான வாக்கு சதவீதத்தை காண்போம்.



தமிழ்நாட்டில் இதுவரை நடைபெற்ற 17 சட்டசபை தேர்தல்களில் பதிவான வாக்கு சதவீதம் வருமாறு:–

1952 – 56.41%
1957 – 46.84%
1962 – 70.65%
1967 – 76.57%
1971 – 71.82%
1977 – 61.58%
1980 – 70.74%
1984 – 73.47%
1989 – 69.69%
1991 – 63.08%
1996 – 66.95%
2001 – 59.07%
2006 – 70.82%
2011 – 78.02%
2016 – 74.81%
2021 – 73.63%
2026 – 85.00%

# பறக்கும் படை வாபஸ்: தேர்தல் நடத்தை விதிமுறைகளில் சில தளர்வுகள் அறிவிப்பு...!



சென்னை, ஏப். 24–

தமிழ்நாட்டில் ஏப்ரல் 23ந்தேதி வாக்குப்பதிவு முடிந்ததன் காரணமாக தேர்தல் நடத்தை விதிமுறைகளில் சில தளர்வுகள் அளிக்கப்பட்டு உள்ளன. அதன் அடிப்படையில் பணப்பட்டுவாடாவை தடுக்க அமைக்கப்பட்ட பறக்கும் படை மற்றும் நிலையான கண்காணிப்பு குழு திரும்பப் பெறப்படுவதாக அறிவிக்கப்பட்டது.இதனால் இன்றுமுதல் பொதுமக்கள் பணம் கொண்டு செல்வதில் எந்த சிக்கலும் எழாது என்பது தெரிய வந்துள்ளது.

# மே 4-ந்தேதி வாக்கு எண்ணிக்கை வாக்குபெட்டிகளுக்கு 18 ஆயிரம் போலீசார் பலத்த பாதுகாப்பு!




சென்னை, ஏப். 24–

தமிழ்நாட்டில் வரலாறு காணாத அளவுக்கு வாக்குப்பதிவு நடைபெற்று முடிந்த நிலையில், வாக்கு எண்ணிக்கை மே 4ந்தேதி நடைபெற உள்ளது. அதுவரை அனைத்து வாக்குப்பெட்டிகளும் பாதுகாப்பாக சீல் வைக்கப்பட்டு, தமிழகம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 62 வாக்கு எண்ணும் மையங்களில் பத்திரமாக சேர்க்கப்பட்டு அறைக்கு சீல் வைக்கப்பட்டது. இந்த அறைகள் அனைத்தும் முழுமையான சிசிடிவி கண்காணிப்புடன் உள்ளது. இதன் கண்காணிப்பு பணியில் 18 ஆயிரம் போலீஸார் ஈடுபட்டுள்ளனர்.

# மம்தா VS அமித்ஷா..

# மேற்கு வங்க தேர்தல் தொடர் தேர்தல் வன்முறை

## 2.40 லட்சம் மத்திய படையினர் குவிப்பு!








கொல்கத்தா, ஏப். 24–

மேற்கு வங்கத்தில் 2 கட்டங்களாக தேர்தல் அறிவிக்கப்பட்டது. நேற்று முதற்கட்டமாக 152 தொகுதிகளுக்கு, 23ம் தேதி தேர்தல் நடந்து முடிந்தது. அடுத்தக்கட்டமாக 142 தொகுதிகளுக்கு வரும் 29ம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது.

இந்நிலையில் தான் மேற்கு வங்கத்தில் சுமார் 2 லட்சத்துக்கும் அதிகமான மத்திய பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டு இருப்பது பேசும் பொருளாகி உள்ளது. இதுதொடர்பாக மம்தா பானர்ஜிக்கும், மத்திய பாஜக அரசுக்கும் கடும் மோதல் உள்ள நிலையில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேற்கு வங்கம் மாநிலத்தில் 2011, 2016, 2021 என தொடர்ந்து 3 முறை திரிணாமுல் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றது. அந்த மாநிலத்தின் முதல்வராக 3வது முறையாக மம்தா பானர்ஜி செயல்பட்டு வருகிறார்.

இந்நிலையில் தான், தமிழகத்தை போல் 23ம் தேதி மேற்கு வங்கத்திலும் சட்டசபை தேர்தல் நடைபெற்றது. மேற்கு வங்கத்தில் மொத்தம் மொத்தம் 294 சட்டசபை தொகுதிகள் உள்ளன. மெஜாரிட்டிக்கு 148 இடங்களில் வெற்றி பெற வேண்டும். அங்கு 2 கட்டங்களாக தேர்தல் அறிவிக்கப்பட்டது. முதற்கட்டமாக ஏப்ரல் 23ம் தேதி 152 தொகுதிகளுக்கும், 2வது கட்டமாக 29ம் தேதி 142 தொகுதிகளுக்கும் தேர்தல் அறிவிக்கப்பட்டது. அதன்பிறகு மே 4ல் ரிசல்ட் வெளியாக உள்ளது.

அதன்படி 23ம் தேதி முதற்கட்டமாக 152 தொகுதிகளுக்கு சட்டசபை தேர்தல் நடந்தது. மாலை 6 மணி நிலவரப்படி மொத்தம் 92.62 சதவீத வாக்குகள் பதிவாகி உள்ளது. இது ஒருபுறம் இருக்க மேற்கு வங்க மாநிலத்தில் 2,400 கம்பெனி மத்திய ஆயுத படை வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். 2,400 கம்பெனியில் மொத்தம் 2.4 லட்சம் வீரர்கள் உள்ளனர். இது விவாதமாகி உள்ளது. இதற்கு மம்தா பானர்ஜி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். மத்திய படைகளை குவித்து ஆட்சியை கைப்பற்ற மத்திய அரசு முயற்சிப்பதாக குற்றம் சாட்டி உள்ளார். ஆனால் மத்திய அரசோ தேர்தலை அமைதியாக நடத்தி முடிப்பதற்காக தான் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்து வருகிறது. இருதரப்புக்கும் இடையே கடும் வார்த்தை மோதல்கள் நடந்து வருகின்றன.

இந்நிலையில் தான் மத்திய அரசின் இந்த பாதுகாப்பு நடவடிக்கையின் பின்னணி பற்றி இங்கு பார்க்கலாம். அதாவது மேற்கு வங்க தேர்தலில் வன்முறைகள் அதிகளவில் நடக்கும். இடதுசாரிகள் முதல் திரிணாமுல் காங்கிரஸ் காலம் வரை, வாக்குச்சாவடிகளில் மோதல்கள் அதிகமாக நடக்கும். பூத்கள் தீயிட்டு எரிக்கப்படும். தற்போதும் இந்த மோதல்கள் தொடர்ந்து வருகின்றன. கடந்த 2000ம் ஆண்டுக்கு பிறகு நடந்த தேர்தல்களில் ஆயிரக்கணக்கான வன்முறை சம்பவங்களும், நூற்றுக்கணக்கான உயிர்பலிகளும் ஏற்பட்டுள்ளது.

ACLED டேட்டாப்படி கடந்த ஆறு ஆண்டுகளில் மேற்கு வங்கம் (35%) அதிக தேர்தல் வன்முறையைக் கண்டுள்ளது. 2021 தேர்தல்களில் 300 சம்பவங்களும் 58 மரணங்களும் ஏற்பட்டன. 2020 முதல், திரிணாமுல் காங்கிரஸ் 77, பாஜக 25 வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளன. இதனால் தான் பல கட்டங்களாக அங்கு சட்டசபை தேர்தல் நடத்தப்படும். கடந்த 2021ல் மொத்தம் 8 கட்டங்களாக நடந்தது. ஆனால் தற்போது 2 கட்டங்களாக குறைக்கப்பட்டுள்ளது. இதனால் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. குறிப்பாக முர்ஷிதாபாத்தில் அண்மையில் நடந்த நாட்டு வெடிகுண்டுத் தாக்குதல்கள் போன்ற சம்பவங்களால் பதற்றம் உள்ளது. இதனால் மத்திய அரசு 2.40 லட்சம் மத்திய ஆயுதப்படை வீரர்களை குவித்துள்ளது. எல்லை காவல் படையினர், வன்முறை தடுப்பு பிரிவு, உள்நாட்டு பாதுகாப்பு பிரிவு என்று 7 பாதுகாப்பு பிரிவுகளை சேர்ந்தவர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். இந்த படை வீரர்கள் அனைவரும் மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் வருவார்கள். இந்த படை வீரர்கள் ராணுவத்தில் இருந்து வேறுபட்டு செயல்படுவார்கள். சட்டம் ஒழுங்கு பராமரிப்பு மற்றும் தேசிய பேரிடர் மற்றும் அவசர கால பணிகளில் இந்த வீரர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். தற்போது அவர்கள் மாநிலத்தில் தேர்தலை அமைதியாக நடத்தும் முடிப்பதற்கான பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

# அசம்பாவிதங்கள் ஏதுமின்றி அமைதியான முறையில் நடந்து முடிந்துள்ளது தேர்தல் - மு.க.ஸ்டாலின்

சென்னை, ஏப். 24–

தமிழகத்தில் 17–வது சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடந்துள்ள நிலையில், தமிழ்நாடு வாக்களித்துவிட்டது, மே 4 தமிழ்நாடு வெல்லும் என்று முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.



இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில், "ஜனநாயகத் திருவிழா: சாதனை வாக்குப்பதிவு; பாராட்டுக்குரிய மக்களின் பொறுப்புணர்வு! எப்போதும் போல பெரிய அசம்பாவிதங்கள் ஏதுமின்றி அமைதியான முறையில் நடந்து முடிந்துள்ளது தமிழ்நாடு தேர்தல். 84.69 சதவீதம் என்ற சாதனை அளவில் வாக்களித்து, ஜனநாயகத்தைப் பாதுகாத்திடும் கடமையைத் தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்கள் சரிவர ஆற்றியுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.

சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் பலர் நீண்ட தூரம் பயணித்து வந்து வாக்களித்து விட்டு, இன்றிரவே மீண்டும் கிளம்பி, அவரவர் பணியாற்றும் ஊர்களுக்குச் செல்கின்றனர். "ஒரு வாக்குதானே" என எண்ணாமல், "ஒரு தலைமுறைக்கான தேர்தல் இது" என்ற நினைப்பே இந்த உந்துதலுக்குக் காரணமாக இருக்க முடியும். அத்தகைய பொறுப்புள்ள குடிமக்கள் அனைவருக்கும் எனது பாராட்டுகள்.

தமிழ்நாடு வாக்களித்துவிட்டது, மே 4 தமிழ்நாடு வெல்லும்!" என்று தெரிவித்துள்ளார்.

தலையங்கம்
மதுரை மணி
வெள்ளிக்கிழமை 24.04.2026
விசுவாவசு தமிழ் வருடம்
சித்திரை மாதம் 11-ம் தேதி

## தங்கம் முதலீட்டில் நடக்கப்போகும் தலைகீழ் மாற்றம்!




Gold : தங்கம் என்பது வெறும் ஆபரணம் மட்டுமல்ல, அது ஒரு வலுவான நிதிச் சொத்தாகும். பணவீக்க காலத்தில் உங்கள் பணத்தின் மதிப்பைப் பாதுகாப்பதில் தங்கம் முக்கியப் பங்கு வகிக்கிறது. தங்கத்தில் முதலீடு செய்ய இன்று பல வழிகள் உள்ளன. அவற்றைப் பற்றி பார்ப்போம்.

**1. கோல்டு இடிஎஃப்**

தங்கத்தை அதன் இயற்பியல் வடிவில் வாங்காமலேயே, அதன் விலை மாற்றங்களால் லாபம் ஈட்ட விரும்பும் முதலீட்டாளர்களுக்கு இது ஒரு சிறந்த வழியாகும். கோல்டு இடிஎஃப் என்பது பங்குச் சந்தையில் வர்த்தகம் செய்யப்படக்கூடிய ஒரு நிதிச் சாதனம். ஒரு இடிஎஃப் யூனிட் என்பது ஒரு குறிப்பிட்ட அளவு தூய தங்கத்தின் விலையைக் குறிக்கிறது.

இதன் மிகப்பெரிய நன்மை என்னவென்றால், நீங்கள் தங்கத்தைப் பாதுகாப்பது குறித்துக் கவலைப்படத் தேவையில்லை. இது டிஜிட்டல் வடிவில் இருப்பதால், திருட்டு பயம் அல்லது லாக்கர் கட்டணம் போன்ற சுமைகள் இல்லை. மேலும், பங்குச் சந்தை இயங்கும் நேரங்களில் எப்போது வேண்டுமானாலும் இவற்றை நீங்கள் சந்தை விலையிலேயே விற்றுப் பணமாக்கிக் கொள்ளலாம். செய்கூலி அல்லது சேதாரம் போன்ற கூடுதல் செலவுகள் இல்லாததால், நீண்ட கால முதலீட்டாளர்களுக்கு இது மிகவும் லாபகரமானது.

**2. கோல்டு மியூச்சுவல் பண்டுகள்**

பங்குச் சந்தையைப் பற்றி நேரடி அறிவு இல்லாதவர்கள் அல்லது டீமேட் கணக்கு இல்லாதவர்கள் இந்த முறையைத் தேர்ந்தெடுக்கலாம். இவை அடிப்படையில் தங்க முதலீட்டுத் திட்டங்களாகும். இந்த நிதிகள் உங்களின் பணத்தை கோல்டு இடிஎஃப்–களிலோ அல்லது தங்கம் சார்ந்த நிறுவனங்களின் பங்குகளிலோ முதலீடு செய்கின்றன.

இந்த முறையின் சிறப்பம்சம் என்னவென்றால், நீங்கள் SIP முறையில் மாதம் ஒரு சிறு தொகையை, உதாரணமாக 500 ரூபாய் முதலீடு செய்ய முடியும். நீங்கள் வாங்கும் ஒவ்வொரு முறைக்கும் அந்த நாளின் தங்க விலைக்கு ஏற்ப யூனிட்டுகள் ஒதுக்கப்படும். சேமிப்பு பழக்கத்தை உருவாக்க விரும்பும் நடுத்தர வர்க்கத்தினருக்கு இது ஒரு பாதுகாப்பான முதலீட்டுத் தேர்வாகும்.

**3. நேரடித் தங்கம்**

இது இந்தியாவில் மிகவும் பிரபலமான முறையாகும். தங்கத்தை நேரிடையாகக் கையில் வைத்திருப்பது மக்களுக்கு ஒருவித மனநிறைவைத் தருகிறது. இதில் தங்க நாணயங்கள், பிஸ்கட்கள் அல்லது ஆபரணங்களை வாங்குவது அடங்கும். இருப்பினும், நிதி ஆலோசகர்கள் ஒரு முக்கியமான எச்சரிக்கையை வழங்குகிறார்கள். ஆபரணங்களாகத் தங்கத்தை வாங்குவதை ஒருபோதும் முதலீடாகக் கருதக்கூடாது. ஏனெனில், நகைகள் வாங்கும் போது அதில் செய்கூலி மற்றும் சேதாரம் போன்ற தேவையற்ற செலவுகள் சேர்க்கப்படுகின்றன. நீங்கள் அந்த நகையை மீண்டும் விற்கும் போது, இந்தச் செலவுகள் கழிக்கப்படும், இதனால் உங்களுக்குக் கிடைக்கும் உண்மையான லாபம் குறையும். முதலீட்டு நோக்கத்தில் நேரடித் தங்கம் வாங்க விரும்புபவர்கள், தூய தங்க நாணயங்கள் அல்லது 24 கேரட் தங்கக் கட்டிகளை வாங்குவதே புத்திசாலித்தனமானது.

**முதலீட்டாளர்கள் கவனத்திற்கு**

நீங்கள் தங்கத்தை முதலீடாகப் பார்க்கிறீர்கள் என்றால், செய்கூலி இல்லாத டிஜிட்டல் முறைகள் ETFs அல்லது Mutual Funds தேர்ந்தெடுப்பது உங்கள் லாபத்தை அதிகரிக்கும். அதே சமயம், அவசரக் காலங்களில் உடனடித் தேவைக்குத் தங்கம் கையில் இருக்க வேண்டும் என நினைப்பவர்கள் சிறு நாணயங்களாகச் சேமிக்கலாம். உங்களின் முதலீட்டுத் திட்டம் குறுகிய காலத்திற்கா அல்லது நீண்ட காலத்திற்கா என்பதைப் பொறுத்துச் சரியான முறையைத் தேர்ந்தெடுங்கள்.





புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளில் இருந்து பாதுகாப்புடன் கொண்டுவரப்பட்டுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலை கல்லூரியில் உள்ள பாதுகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ளது. இதனை அனைத்து கட்சி பிரமுகர்கள் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலருமான அருணா தலைமையில் பாதுகாப்பு அறையை பூட்டி சீல் வைக்கப்பட்டது.

# சி.பி.எஸ்.இ. 10-ம் வகுப்பு 2-வது பொதுத்தேர்வு நடைபெறும் தேதி அறிவிப்பு!




புதுடெல்லி, ஏப். 24–

மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் (சி.பி.எஸ்.இ), 10–ம் வகுப்பு மாணவர்களு க்கான 2–வது பொதுத்தேர்வு கால அட்டவணையை வெளியிட்டு உள்ளது. இத்தேர்வுகள் மே 15–ம் தேதி தொடங்கி நடைபெற உள்ளன. சி.பி.எஸ்.இ வரலாற்றில் முதன்முறையாக இந்த ஆண்டு 2 பொதுத்தேர்வு முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், ஏற்கனவே பிப்ரவரி மாதம் நடந்த முதன்மைப் பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள், தங்கள் மதிப்பெண்களை உயர்த்திக்கொள்ள அதிகபட்சமாக 3 பாடங்களில் மீண்டும் தேர்வு எழுத வாய்ப்பு வழங்கப்படுகிறது. அனைத்து தேர்வுகளும் காலை 10:30 மணி முதல் மதியம் 01:30 மணி வரை ஒரே ஷிப்ட்டில் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே 15, வெள்ளிக்கிழமை: முதல் நாளில் கணிதப் பாடத்திற்கான தேர்வுகள் நடைபெறுகின்றன.

கணிதம் – ஸ்டாண்டர்ட் (பாடம் குறியீடு: 041)

கணிதம் – பேசிக் (பாடம் குறியீடு: 241)

மே 16, சனிக்கிழமை: 2–ம் நாளில் ஆங்கிலப் பாடத்திற்கான தேர்வுகள் நடைபெறும்.

ஆங்கிலம் – கம்யூனிகேட்டிவ் (பாடம் குறியீடு: 101)

ஆங்கிலம் – மொழி மற்றும் இலக்கியம் (பாடம் குறியீடு: 184)

மே 18, திங்கட்கிழமை: அறிவியல் (பாடம் குறியீடு: 086)

மே 19, செவ்வாய்க்கிழமை: இறுதி நாளில் தமிழ் உள்ளிட்ட பிற மொழிப் பாடங்களுக்கான தேர்வுகள் நடைபெறுகின்றன.

இந்தி Course–A (002), உருது Course–A (003), பஞ்சாபி (004), பெங்காலி (005), தமிழ் (006), தெலுங்கு (007), மராத்தி (009), குஜராத்தி (010), மணிப்புரி (011), மலையாளம் (012), ஒடியா (013), அசாமி (014), கன்னடம் (015) மற்றும் அரபு (016).

இந்த 2–வது பொதுத்தேர்வு முறையானது, மாணவர்கள் தங்கள் மதிப்பெண்களை மேம்படுத்திக்கொள்ள வழங்கப்பட்ட ஒரு சிறப்பு வாய்ப்பாகும். பிப்ரவரி மாதம் நடைபெற்ற முதன்மைத் தேர்வில் பங்கேற்ற மாணவர்கள், இத்தேர்வின் மூலம் தங்களின் கல்வித் தரத்தை உயர்த்திக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஏப்ரல் 15–ஆம் தேதி வெளியான சிபிஎஸ்இ 10–ஆம் வகுப்பு முதன்மைத் தேர்வு முடிவுகளில், தேசிய அளவிலான தேர்ச்சி விகிதம் 93.70 சதவீதமாக இருந்தது. இதில் தலைநகர் டெல்லி 97.38 சதவீத தேர்ச்சியுடன் தேசிய சராசரியை விட அதிக மதிப்பெண்களை பெற்றுள்ளது. இது கடந்த ஆண்டின் தேர்ச்சி விகிதத்தை விட (95.14%) கணிசமான உயர்வாகும். தற்போது அறிவிக்கப்பட்டுள்ள இரண்டாவது தேர்வு, மாணவர்கள் தங்களின் மதிப்பெண்களை மேம்படுத்தி உயர்கல்விக்குச் செல்ல ஒரு சிறந்த வாய்ப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மதுரை மீனாட்சி திருக்கல்யாண விருந்து... காய்கறி வெட்டப் பக்தர்களுக்கு அழைப்பு...!



மதுரை, ஏப். 24–

மதுரை மீனாட்சி திருக்கல்யாணத்தை முன்னிட்டு, திருக்கல்யாண விருந்து தயாரிப்பில் பங்கேற்க பக்தர்களுக்கு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

மதுரையில் நடைபெற உள்ள மீனாட்சி திருக்கல்யாணம் முன்னிட்டு, பக்தர்களுக்கான திருக்கல்யாண விருந்து ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதற்காக மதுரை சேதுபதி மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வருகிற ஏப்ரல் 28ஆம் தேதி நடைபெறும் திருக்கல்யாணத்தை ஒட்டி, அதற்கு முன்தினமான ஏப்ரல் 27ஆம் தேதி முதல் விருந்து தொடர்பான பணிகள் தொடங்குகின்றன. அதன்படி, ஏப்ரல் 27ஆம் தேதி மதியம் 1மணி முதல் சமையலுக்கான காய்கறி வெட்டும் பணிகள் ஆரம்பமாகின்றன.இதில் கலந்து கொண்டு சேவை செய்ய விரும்பும் பக்தர்கள், தங்களது வீடுகளில் இருந்து அரிவாள்மனை மற்றும் கத்தி கொண்டு வந்து உதவுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். அதே நாளில் மாலை 5 மணி முதல் மாப்பிள்ளை விருந்து நடைபெற உள்ளது.

தொடர்ந்து ஏப்ரல் 28ஆம் தேதி காலை 7 மணி முதல் இடைவெளியின்றி திருக்கல்யாண விருந்து வழங்கப்பட உள்ளது. இதற்காக சுமார் 12 ஆயிரம் சதுர அடிப் பரப்பளவில் பள்ளி வளாகத்தில் விரிவான பந்தல் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. இந்த திருக்கல்யாண விருந்து நிகழ்ச்சி தொடர்ந்து 27ஆம் ஆண்டாக நடை பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. ஏற்பாடுகளை பழமுதிர்சோலை திருவருள் முருகன் பக்த சபை டிரஸ்ட் மேற்கொண்டு வருகிறது. கடந்த ஆண்டு சுமார் 1.40 லட்சம் பக்தர்கள் கலந்து கொண்டு விருந்து பெற்றனர். இந்த ஆண்டு அதைவிட அதிகமான பக்தர்கள் பங்கேற்பர் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# 2025-26-ம் நிதியாண்டில் 7,914 ரெயில் பெட்டிகள் தயாரிப்பு - ரெயில்வே தகவல்!



சென்னை, ஏப். 24–

இந்தியாவில் ரெயில் பயணிகள் எண்ணிக்கை மற்றும் தேவைகளுக்கு ஏற்ப பல்வேறு புதிய மாற்றங்களை ரெயில்வே வாரியம் கொண்டு வருகிறது. குறிப்பாக, பழைய ரெயில் பெட்டிகளுக்கு பதிலாக, நவீன மற்றும் பாதுகாப்பான எல்.எச்.பி. பெட்டிகள் தயாரிப்பை அதிகப்படுத்தியுள்ளது. இந்தியாவில் சென்னை பெரம்பூர் ஐ.சி.எப். தொழிற்சாலை, பஞ்சாப் கபூர்த்தலாவில் உள்ள ஆர்.சி.எப். தொழிற்சாலை, உத்தரபிரதேசத்தில் உள்ள எம்.சி.எப். தொழிற்சாலை ஆகிய 3 ரெயில் பெட்டி தொழிற்சாலைகள் உள்ளது.

இங்கு எக்ஸ்பிரஸ், பயணிகள் ரெயில், மின்சார ரெயில் உள்பட அனைத்து வகை ரெயில் பெட்டிகளும் தயாரிக்கப்பட்டு வருகிறது. ரெயில் பெட்டிகள் உற்பத்தி செய்யும்பணி ஆண்டுதோறும் கணிசமாக உயர்ந்து வருகிறது. அதன்படி, 2025–26–ம் நிதியாண்டில் 7,914 ரெயில் பெட்டிகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

இது கடந்த (2024–25) நிதியாண்டில் தயாரிக்கப்பட்ட 7,134 ரெயில் பெட்டிகளைவிட 11 சதவீதம் அதிகமாகும். அதிகரித்து வரும் பயணிகள் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக ரெயில்வே உள்கட்டமைப்பை நவீனமாக்குவதில் இந்திய ரெயில்வே தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. 2004–2014 இடையே இந்திய ரெயில்வே ஆண்டுக்கு சராசரியாக 3,300–க்கும் குறைவான பெட்டிகளையே உற்பத்தி செய்தது. தற்போது மேம்பட்ட இணைப்பு மூலம் உற்பத்தி வெகுவாக அதிகரித்திருப்பதாக ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தமிழகத்தில் தேர்தல் பணியில் இருந்த போலீஸ் டி.எஸ்.பி., எஸ்.ஐ. உயிரிழப்பு!



சென்னை, ஏப். 24–

போலீஸ் டி.எஸ்.பி.:–

ராமநாதபுரம் மாவட்டத்தில் போதைபொருள் தடுப்பு பிரிவு சி.ஐ.டி. போலீஸ் துணை சூப்பிரண்டாக பணியாற்றி வந்த வர் ராமகிருஷ்ணன் (வயது 56). இவர் நேற்று மாலை திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இடையக்கோட்டை வாக்குச்சாவடி பகுதிகளில் தேர்தல் ரோந்து பணியில் ஈடுபட்டார்.

அப்போது அவருக்கு திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. இதையடுத்து அவர் ஒட்டன்சத்திரத்தில் ஒரு தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பலனின்றி ராமகிருஷ்ணன் பரிதாபமாக இறந்தார். இந்த சம்பவம் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரிகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

எஸ்.ஐ. கண்ணதாசன்:–

சேலம் மாவட்டம் மல்லிகரை போலீஸ் நிலையத்தில் பணியாற்றி வந்தவர் சிறப்பு சப் – இன்ஸ்பெக்டர் கண்ணதாசன். இவர் கடந்த சில நாட்களாக தம்மம்பட்டி அருகே உள்ள நாகியம்பட்டி பகுதியில் தேர்தல் பணியில் ஈடுபட்டு வந்தார். இந்தநிலையில் நேற்று நாகியம்பட்டியில் உள்ள வாக்குச்சாவடி மையத்தில் சிறப்பு சப்–இன்ஸ்பெக் டர் கண்ணதாசன் பணியில் ஈடுபட்டார். அப்போது அவருக்கு திடீரென உடல்நலம் பாதிக்கப்பட்டு அப்பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். பின்னர் அவர் மேல்சிகிச்சைக்காக சேலத்தில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் வரும் வழியிலேயே கண்ணதாசன் பரிதாபமாக இறந்தார். இதய செயழிலப்பால் கண்ணதாசன் உயிரிழந்ததாக மருத்துவர்கள் தெரிவித்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# இந்தியர்கள் பிரான்ஸ் செல்ல இனி விசா தேவையில்லை!



புதுடெல்லி, ஏப். 24–

இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் ரந்தீர் ஜெய்ஸ்வால் நேற்று கூறியதாவது:–

ஐரோப்பிய பிராந்தியமான பிரான்ஸ் வழியாகப் பயணிக்கும் இந்தியர்களுக்கான விசா இல்லாத பயணத்தை பிரெஞ்சு அரசாங்கம் இப்போது செயல்படுத்தியுள்ளது. இந்த முடிவு, இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவதில் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் அதிபர் இம்மானுவேல் மக்ரோன் ஆகியோரின் ஆழ்ந்த அர்ப்பணிப்பைக் காட்டுகிறது.

இந்த அறிவிப்பை நாங்கள் வரவேற்கிறோம். உங்களுக்கு நினைவிருக்கலாம். இந்த ஆண்டு பிப்ரவரியில் மும்பையில் நடந்த சந்திப்பின் போது பிரதமர் மற்றும் அதிபர் மக்ரோன் இடையே இந்திய கடவுச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கான போக்குவரத்து விசா தேவையை நீக்குவது குறித்து ஒப்புக்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அவர் கூறி உள்ளார்.



# செல்வம் இரட்டிப்பாகும்.. ஜூன் மாதத்திற்கு பிறகு இந்த ராசிக்காரர்களுக்கு கஜலக்ஷ்மி ராஜயோகம்..! உங்க ராசி இருக்கா?



ஜோதிட சாஸ்திரத்தில், வியாழன் கிரகம் தேவர்களின் குருவாகக் கருதப்படுகிறது. இந்த வியாழன் கிரகம் தற்போது மிதுன ராசியில் சஞ்சரிக்கிறது. ஜூன் 2 ஆம் தேதி, இந்த வியாழன் கிரகம் விருச்சிக ராசியில் நுழையும். மேலும், ஜூன் 9 ஆம் தேதி சுக்கிரனும் விருச்சிக ராசியில் நுழையும். இந்த இரண்டு கிரகங்களின் சேர்க்கையால் கஜலட்சுமி யோகம் உருவாகும். ஜூலை 5 ஆம் தேதி வரை, இந்த இரண்டு கிரகங்களும் விருச்சிக ராசியில் நிலைத்திருக்கும். இதனால், சில ராசிகளின் செல்வம் அதிகரிக்கும். அவர்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுவார்கள். அவர்களின் வருமானம் இரட்டிப்பாகும். மேலும், அந்த ராசிகள் என்னவென்று பார்ப்போம்...

**மிதுனம்:** மிதுன ராசிக்காரர்களுக்கு கஜலட்சுமி ராஜ யோகம் மிகவும் சாதகமாக இருக்கும். மகாலட்சுமி யோகம் மிதுன ராசிக்காரர்களுக்கு அளவற்ற வளர்ச்சியைத் தரும். ஜூன் 9 அன்று, குரு மற்றும் சுக்கிரனின் சேர்க்கை உங்கள் வாழ்வில் செல்வத்திற்கான கதவுகளைத் திறக்கும். இந்த யோகத்தால், உங்கள் வாழ்வில் அமைதியும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நீண்ட காலமாக உங்கள் மனதில் இருந்த குழப்பம் இப்போது தீரும். பணியில் இருப்பவர்கள் தங்கள் தொழில் வாழ்க்கையில் பெரும் முன்னேற்றம் காண்பார்கள். நிதி நிலைமை மேம்படும்.

**சிம்மம்:** மகாலட்சுமி யோகம் சிம்ம ராசிக்காரர்களின் வாழ்க்கையைப் பொன்னாக்கும். வாழ்க்கை மகிழ்ச்சியாக மாறும். அனைவரும் உங்கள் பேச்சைக் கேட்கத் தொடங்குவார்கள். பணியில் இருப்பவர்களுக்குப் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது. நிதி நிலைமை மேம்படும். நீங்கள் எந்தத் துறையிலும் வெற்றி பெறுவீர்கள். கடந்த காலத்தின் சவால்களும் தடைகளும் நீங்கும். சிம்ம ராசிக்காரர்கள் புதிய வாய்ப்புகளைத் தேடி வருவார்கள்.

**தனுசு:** தனுசு ராசியில் கஜலட்சுமி ராஜ யோகம் உருவாகும். இது வெளிநாட்டுப் பயணங்களுக்கான வாய்ப்புகளை வழங்கும். ஆன்மீகத்தில் ஆர்வம் அதிகரிக்கும். நீங்கள் புனித யாத்திரைகள் மேற்கொள்வீர்கள். வேலை தேடுபவர்களுக்கு நல்ல சம்பளத்துடன் வேலை கிடைக்கும். வீட்டில் மகிழ்ச்சியும் சுப காரியங்களும் அதிகரிக்கும். இந்தக் காலத்தில், சுக்கிரனின் அருளால் உடல்நலப் பிரச்சினைகள் நீங்கி, உடல்நிலை மேம்படும்.

இந்தக் காலம் மாணவர்களுக்கு மிகவும் சாதகமானது. போட்டித் தேர்வுகளில் எதிர்பாராத மதிப்பெண்களைப் பெறுவீர்கள். புதிய வீடு மற்றும் வாகனம் வாங்குவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. உடல்நிலை மேம்படும். இந்தக் காலம் ஊழியர்களுக்கு மிகவும் சாதகமானது. நீங்கள் வேலையில் வெற்றி பெறுவீர்கள். புகழும் கௌரவமும் அதிகரிக்கும். தொழிலதிபர்கள் நல்ல லாபம் பெறுவார்கள். ரியல் எஸ்டேட் துறையில் இருப்பவர்களுக்கு இரட்டிப்பு லாபம் கிடைக்கும்.

**ரிஷபம்:** இந்த ராஜ யோகம் ரிஷப ராசிக்காரர்களுக்கு வரப்பிரசாதமாக அமையும். கடந்த காலத்தில் நீங்கள் செய்த முதலீடுகள் இப்போது உங்களுக்கு நல்ல பலன்களைத் தரும். நீங்கள் பணியில் இருந்தால், உங்கள் சக ஊழியர்களும் மேலதிகாரிகளும் உங்களைப் பாராட்டக்கூடும். குருவின் அருளால் சம்பள உயர்வு அல்லது பதவி உயர்வு கிடைப்பதற்கும் வாய்ப்புள்ளது. உங்கள் நிலுவையில் உள்ள அனைத்துப் பணிகளும் விரைவில் முடிவடையும்.

மேலும், சுக்கிரனின் தாக்கத்தால், நீண்ட காலமாக உங்களைத் தொந்தரவு செய்து வந்த குடும்பப் பிரச்சனைகள் அல்லது உடல்நலப் பிரச்சனைகள் இந்தக் காலகட்டத்தில் முடிவுக்கு வரும். குடும்ப உறுப்பினர்கள் உங்களுக்கு வேலையில் முழு ஆதரவு அளிப்பார்கள். இது உங்கள் தனிப்பட்ட வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் அமைதியையும் கொண்டு வரும். வியாபாரம் செய்பவர்களுக்கு, இந்த மகாலட்சுமி யோகம் லாபகரமான வாய்ப்புகளை வழங்கும்.

**கன்னி:** கன்னி ராசியின் 11 ஆம் வீட்டில் குரு–சுக்கிரன் சேர்க்கை கஜலட்சுமி ராஜ யோகத்தை உருவாக்குகிறது. இது உங்கள் அதிர்ஷ்டத்தை மேம்படுத்தும். நீங்கள் நீண்ட தூரம் பயணம் செய்வீர்கள். இந்தப் பயணங்கள் நல்ல நிதி ஆதாயங்களைக் கொண்டு வரும். வேலையில் அதிர்ஷ்டம் இருந்தால், உங்கள் இலக்குகளை அடைவீர்கள். சிலருக்கு பதவி உயர்வு மற்றும் சம்பள உயர்வுக்கான வாய்ப்பும் கிடைக்கும்.

தொழிலதிபர்களுக்கு எதிர்பாராத லாபத்தைக் கொண்டுவரும் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். காதல் மற்றும் திருமண வாழ்க்கை இனிமையாக இருக்கும். மாணவர்கள் தங்கள் படிப்பில் வெற்றி பெறுவார்கள். பல வழிகளில் பணம் திரட்ட முடியும். வருமானத்தில் எதிர்பாராத அதிகரிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

# கள்ளழகர் ஆற்றில் இறங்கும் விழா: வைகை அணை திறப்பு!



மதுரை, ஏப். 24–

மதுரையில் கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் விழாவுக்காக வைகை அணையிலிருந்து நீர் திறக்கப்பட்டுள்ளது. விநாடிக்கு 500 கன அடி வீதம் 6 நாட்களுக்கு வைகை ஆற்றில் தண்ணீர் திறக்கப்படுகிறது.

வைகை அணையிலிருந்து நீர் திறக்கப்படுவதால் தேனி, மதுரை மாவட்ட மக்களுக்கு வெள்ள எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. மே 1ஆம் தேதி வைகை ஆற்றில் இறங்குகிறார் கள்ளழகர். மதுரை தயாராகிறது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### மாம்பழத்தை இப்படி மட்டும் சாப்பிடாதீங்க.. உடல் நலப் பிரச்சனைகள் வரலாம்..!



கோடைக்காலம் வந்தவுடன், அனைவரின் நினைவுக்கும் முதலில் வருவது மாம்பழம்தான். அவை கோடைக்காலத்தில் மட்டுமே கிடைப்பதால், அனைவரும் அவற்றை அப்போதே சாப்பிட வேண்டும் என்று நினைக்கிறார்கள். இருப்பினும், இந்தப் பழத்தைச் சாப்பிடும்போது செய்யும் தவறுகளால் சிலருக்குப் பல உடல்நலப் பிரச்சனைகள் ஏற்படக்கூடும். எனவே, இந்த மாம்பழங்களைச் சாப்பிடும்போது என்னென்ன தவறுகளைச் செய்யக்கூடாது என்று பார்ப்போம்...

**அளவுக்கு அதிகமாக சாப்பிடுவது:** மாம்பழம் சுவையில் ஒரு அற்புதமான பழம். இதைத் தனியாகக் குறிப்பிடத் தேவையில்லை. மாம்பழங்கள் சுவையாக இருப்பதால் பலர் அவற்றை அதிக அளவில் சாப்பிடுகிறார்கள். இந்தத் தவறைச் செய்யாதீர்கள். இந்தப் பழத்தில் சர்க்கரையின் அளவும் கலோரிகளும் மிக அதிகமாக உள்ளன. இந்தப் பழத்தை அதிகமாகச் சாப்பிடுவது இரத்தச் சர்க்கரை அளவை அதிகரிக்கிறது. இது உடல் எடை அதிகரிப்புக்கு வழிவகுக்கும். மேலும், இது வயிற்றுப்போக்கையும் ஏற்படுத்தக்கூடும். அதனால்தான் நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பழங்களைச் சாப்பிடக்கூடாது.

**புரத உணவுகளை தவிர்த்தல்:** நீங்கள் மாம்பழம் சாப்பிடும்போது, உங்கள் இரத்த சர்க்கரை அளவு திடீரென அதிகரிக்கும். இதைக் கட்டுப்படுத்த, மாம்பழத்தை புரதச்சத்து நிறைந்த உணவுகளுடன் சேர்த்து சாப்பிட வேண்டும். அதாவது, பாதாம், தயிர் அல்லது சிறிதளவு பனீர் போன்ற புரதச்சத்து நிறைந்த உணவுகளுடன் சேர்த்து சாப்பிடுங்கள். அப்போது, உடல் எடை கூடும் பிரச்சனை உங்களுக்கு ஏற்படாது. உடல்நலப் பிரச்சனைகளும் தவிர்க்கப்படும்.

**உணவுக்கு பின் சாப்பிடுதல்:** பலர் சாப்பிட்ட உடனேயே மாம்பழத்தை ஒரு இனிப்புப் பண்டமாகச் சாப்பிடுகிறார்கள். குறிப்பாக பிரியாணி போன்ற கனமான உணவுகளை உண்ணும்போது, இனிப்பு ஆசைக்காக மாம்பழத்தைச் சாப்பிடக்கூடாது. உணவில் உள்ள கலோரிகளுடன் மாம்பழத்தின் கலோரிகளும் சேர்ந்தால், அது செரிமான மண்டலத்திற்குச் சுமையை ஏற்படுத்தும். இது அஜீரணம் மற்றும் வாயுப் பிரச்சனைகளை ஏற்படுத்தும். சாப்பிட்டு குறைந்தது 1 முதல் 2 மணி நேரம் கழித்து மட்டுமே பழங்களைச் சாப்பிட வேண்டும்.

**வேகமாக சாப்பிடுவது:** எந்தவொரு உணவிலும் உள்ள ஊட்டச்சத்துக்களை, அதை நன்றாக மென்று சாப்பிட்டால் மட்டுமே உடல் உறிஞ்சிக்கொள்ளும். மாம்பழங்களை மிக வேகமாக விழுங்குவது, செரிமான நொதிகள் சரியாகக் கலப்பதைத் தடுக்கிறது. அவற்றை மெதுவாக மென்று சுவைத்து உண்பது, எளிதில் செரிமானம் ஆக உதவும்.

**ஜூஸ் வடிவில் உட்கொள்வது:** பலர் மாம்பழச் சாறு குடிக்க விரும்புகிறார்கள். மாம்பழத்தைச் சாறு வடிவில் உட்கொள்வது அதிலுள்ள நார்ச்சத்தை நீக்கிவிடுகிறது. நார்ச்சத்து இல்லாமல் அதை உட்கொள்வது சர்க்கரை அளவை வேகமாக அதிகரிக்கச் செய்கிறது. பழத்தை அப்படியே உட்கொள்வது நல்ல ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது..

# தென்கொரியாவில் சாம்சங் ஊழியர்கள் போராட்டம்: 18 நாள் வேலைநிறுத்த எச்சரிக்கை!



சியோல், ஏப்.24–

தென்கொரியாவிவில் 40 ஆயிரம் சாம்சங் நிறுவன ஊழியர்கள் ஊதிய உயர்வு, போனஸ் கேட்டு 18 நாள் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் அபார வளர்ச்சியால் சாம்சங் நிறுவனம் தற்போது இமாலய லாபத்தை அள்ளி வருகிறது. குறிப்பாக, கடந்த மார்ச் வரையிலான காலாண்டில் மட்டும் சுமார் ரூ.3.2 லட்சம் கோடி லாபம் ஈட்டியுள்ளதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஆனால், இந்த பெரும் லாபத்துக்கு உழைத்த தங்களுக்கு உரிய போனஸ் வழங்கப்படவில்லை என்பதே ஊழியர்களின் முக்கியக் குற்றச்சாட்டாகும். "போனஸ் வழங்குவதில் வெளிப்படைத்தன்மை வேண்டும்! உச்சவரம்பை நீக்கு!" என வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தி, பலத்த போலீஸ் பாதுகாப்பையும் மீறி அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சாம்சங்கின் போட்டி நிறுவனமான எஸ்.கே. ஹைனிக்ஸ், தனது ஊழியர்களுக்கு வாரி வழங்கிய போனஸ் தான் தற்போது சாம்சங் ஊழியர்களிடையே தீயாகப் பரவியுள்ளது. சாம்சங்கில் அடிப்படை ஊதியம் வாங்கும் ஒருவருக்கு கிடைக்கும் போனஸை விட, அதே அளவு ஊதியம் பெறும் எஸ்.கே. ஹைனிக்ஸ் ஊழியருக்கு 3 மடங்கு கூடுதல் போனஸ் கிடைக்கிறது என ஊழியர்கள் ஆதங்கத்துடன் தெரிவித்தனர்.

தற்போது 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஊழியர்கள் தொழிற்சங்கத்தில் பலமாக இணைந்துள்ளதால் சாம்சங் நிர்வாகம் கடும் நெருக்கடியில் உள்ளது. அடிப்படை ஊதியத்தில் 7 சதவீத உயர்வு மற்றும் லாபத்தில் 15 சதவீதத்தை போனஸாக வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை நிர்வாகம் ஏற்க மறுத்து வருகிறது.

பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால், வரும் மே 21–ந்தேதி முதல் தொடர்ந்து 18 நாட்களுக்குப் பிரம்மாண்ட வேலைநிறுத்தத்தில் ஈடுபடப் போவதாகத் தொழிற்சங்கத் தலைவர் சோய் சியுங்–ஹோ எச்சரித்துள்ளார். ஒருநாள் வேலைநிறுத்தம் நடந்தால் கூட நிறுவனத்திற்கு சுமார் ரூ.5 ஆயிரத்து 600 கோடி இழப்பு ஏற்படும் எனக் கூறப்படுகிறது.

இந்த வேலைநிறுத்தம் நடந்தால், உலகம் முழுவதும் செல்போன் மற்றும் கணினிகளுக்குத் தேவையான சிப் தயாரிப்பு முற்றிலும் பாதிக்கப்படும். இதனால் சிப்களின் விலை உயர்ந்து, மற்ற மின்னணு சாதனங்களின் விலையும் அதிகரிக்கக்கூடும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இந்த போராட்டத்தால் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை இழக்க நேரிடும் என்பதால், சமரசப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண நிர்வாகம் முயற்சி செய்து வருகிறது.

# வேலை வாய்ப்பு

## தேசிய ஓய்வூதிய அமைப்பு அறக்கட்டளை (NPS அறக்கட்டளை) – 15 காலியிடங்கள்!

**NPS Trust Recruitment 2026**

- Vacancy: 15
- Post Name: Executive, Senior Executive, Analyst, Senior Analyst
- Qualification: B.E/B.Tech, Law, MBA, MCA, M.Sc, CA/ ICMA/ CFA
- Selection Process: Short Listing, Interview

நிறுவனத்தின் பெயர்: தேசிய ஓய்வூதிய அமைப்பு அறக்கட்டளை (NPS Trust/Trust)

அறிவிப்பு எண்: 04/2026 தேதி: 08.04.2026

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: ஒப்பந்த அடிப்படையில்

மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 15 நிர்வாகி, மூத்த நிர்வாகி, ஆய்வாளர், மூத்த ஆய்வாளர் பணியிடங்கள்

பணியிட மாற்றம்: புது தில்லி

தொடங்கும் தேதி: 08.04.2026

கடைசி தேதி: 29.04.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆஃப்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://npstrust.org.in/

# சிறுவர்களை வாகனம் ஓட்ட அனுமதிக்கும் பெற்றோருக்கு அபராதம், சிறை தண்டனை என எச்சரிக்கை!



புதுச்சேரி, ஏப். 24–

புதுவை போக்குவரத்து சீனியர் எஸ்பி திவ்யா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

புதுவையில் சில பெற்றோர்கள், வாகன உரிமையாளர்கள் குறைந்த வயதுடையவர்களுக்கு வாகனம் ஓட்ட அனுமதி அளிக்கின்றனர். இதனால் அவர்களின் உயிர் மட்டுமின்றி, பிற சாலை பயணிகளின் உயிருக்கும் ஆபத்து ஏற்படுகிறது.

குறைந்த வயதில் வாகனம் ஓட்டுதல் மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் கடுமையான குற்றமாகும். 18 வயதுக்கு குறைவானவர்கள் வாகனம் ஓட்டுவது சட்டவிரோதம். குறைந்த வயதுடையோர் வாகனம் ஓட்டும் போது பிடிபட்டால் பெற்றோர், வாகன உரிமையாளர் குற்றவாளியாக கருதப்பட்டு ரூ.25 ஆயிரம் வரை அபராதம், 3 ஆண்டு சிறை தண்டனை, ஓட்டுநர் உரிமம் சஸ்பெண்டு செய்யப்படும்.

வாகனம் ஓட்டுவோர் குழந்தைகள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார். மேலும் 25 வயது வரை அவர் ஓட்டுநர் உரிமம் பெற தகுதி இழப்பார். பயன்படுத்தப்பட்ட வாகன பதிவு 12 மாதம் ரத்து செய்யப்படும். கடந்த 20ந் தேதி முதல் 24ந் தேதி வரை நடந்த சிறப்பு சோதனையில் குறைந்த வயது வாகனம் ஓட்டியது தொடர்பாக 30 நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெற்றோர்கள், வாகன உரிமையாளர்கள் பொறுப்புடன், எந்த சூழலிலும் குறைந்த வயதுடையவர்கள் வாகனம் ஓட்ட அனுமதிக்க வேண்டாம். பள்ளிகளிலும் இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். கடுமையான அமலாக்க நடவடிக்கைகள் புதுவை முழுவதும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். விதி மீறுவோர் மீது சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# செவ்வாய் கிரக ஆராய்ச்சியில் புதிய திருப்பம்; நாசா அனுப்பிய விண்கலம் மூலம் முக்கிய கண்டுபிடிப்பு!



புதுடெல்லி, ஏப். 24–

செவ்வாய் கிரகம் ஒரு காலத்தில் உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலைக் கொண்டிருந்ததா என்பது பற்றி ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இதற்காக நாசாவின் கியூரியாசிட்டி ரோவர், செவ்வாய் கிரகத்தின் கேல் பள்ளத்தை ஆராய 2012–ல் அனுப்பப்பட்டது.

இது கார் அளவிலான, அணுசக்தியால் இயங்கும் விண்கலமாகும். இது செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்து, அங்குள்ள பாறைகளில் கரிம மூலக்கூறுகள் மற்றும் நீரின் தடயங்களை கண்டறிந்துள்ளது. இந்த நிலையில், செவ்வாய் கிரகத்தில் உயிர் வாழ்ந்ததற்கான புதிய ஆதாரமாக இதுவரை கண்டறியப்படாத மிகச் சிக்கலான 7 கரிம மூலக்கூறுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

அங்குள்ள பாறைகளில் உயிரினங்களின் அடிப்படையாகக் கருதப்படும் நைட்ரஜன் மற்றும் கந்தகச் சேர்மங்கள் இருப்பதை ஒரு சிறப்பு வேதியியல் பரிசோதனை வெளிப்படுத்தியுள்ளது. இது பூமியில் உள்ள ஆ.என்.ஏ. மற்றும் டி.என்.ஏ.க்கு முன்னோடியாக கருதப்படுகிறது. இதனை விஞ்ஞானிகள் வியப்புடன் பார்வையிட்டு அடுத்தக்கட்ட ஆய்வை நோக்கி நகர்ந்துள்ளனர். இதன் மூலம் உயிர் வாழத் தேவையான வேதியியல் சூழல் அங்கு இருந்தது மீண்டும் ஒருமுறை உறுதியாகியுள்ளது. எனினும், இவை ஒரு உயிரினத்தின் எச்சங்களா அல்லது வெறுமனே ஒரு வேதியியல் செயல்முறையின் விளைவா என்பதை விஞ்ஞானிகள் இன்னும் உறுதிப்படுத்தவில்லை. இருப்பினும், இந்தக் கண்டுபிடிப்பு பிரபஞ்சத்தில் உயிரினங்களைத் தேடும் முயற்சியில் ஒரு புரட்சிகரமான திருப்புமுனையாக அமைந்துள்ளது.

# மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வங்கிகளுடன் ஆலோசனை!



புதுடெல்லி, ஏப். 24–

அனைத்து வங்கிகளும் தங்களது தகவல் தொழில்நுட்ப அமைப்புகளை பாதுகாக்கவும், வாடிக்கையாளர் தரவுகளை பேணவும், நிதி ஆதாரங்களை பாதுகாக்கவும் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமன் வலியுறுத்தினார்.

கூட்டத்தின் போது, இணைய பாதுகாப்பு அமைப்புகளையும் நெறிமுறைகளையும் வலுப்படுத்துவதில் வங்கிகள் இதுவரை ஆற்றியுள்ள பணிகளை மத்திய நிதியமைச்சர் பாராட்டினார் என நிதி அமைச்சகம் X தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்துள்ளது.

இருப்பினும், சமீபத்திய செயற்கை நுண்ணறிவு மாதிரியில் இருந்து உருவாகும் அச்சுறுத்தலின் தன்மை முன்னெப்போதும் இல்லாதது என்றும், இதற்கு நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் முழுவதும் மிக உயர்ந்த அளவிலான விழிப்புணர்வு, தயார்நிலை மற்றும் சிறந்த ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881


# சட்டமன்ற தேர்தல் சமயத்தில்..கெனிஷாவுடன் வெளியூர் சென்ற ரவி மோகன்!?



ரவி மோகனும், பாடகி கெனிஷாவும் கடந்த ஓராண்டாகவே நெருக்கமாக பழகி வருகின்றனர். ஆர்த்தி–ரவி இருவரது விவாகரத்து வழக்கு இன்னும் நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. இந்த நிலையில், அவர் தோழி கெனிஷாவுடன் நெருக்கம் காட்டுவது குறித்து ரசிகர்கள் அவ்வப்போது பேசி வருகின்றனர்.

ரவி மோகன், சட்டமன்ற தேர்தல் நடைபெறும் இந்த சமயத்தில் தந்து தோழி கெனிஷாவுடன் திருப்பதிக்கு சென்றிருக்கிறார். அங்கு சாமி தரிசனம் முடித்த பின்பு இவர் செய்தியாளர்களையும் சந்தித்து பேசினார். கராத்தே பாபு, ஜீனீ உள்ளிட்ட படங்கள் அடுத்தடுத்து வெளியாகும் என்று கூறிய அவர், தன்னை தேடி இன்னும் நிறைய தெலுங்கு படங்களும் வந்துகொண்டே இருப்பதாக தெரிவித்தார்.

# சினிமா துளிகள்..!

## மீண்டும் உச்சத்திற்கு வரும் சியான் மார்க்கெட்! 2026-ல் விக்ரமின் கையில் இருக்கும் படங்கள்!!




கௌதம் வாசுதேவ் மேனன் இயக்கத்தில் உருவான துருவ நட்சத்திரம் கிட்டத்தட்ட பத்து ஆண்டுகால போராட்டத்திற்குப் பிறகு, வரும் மே 24, 2026 அன்று வெளியாகத் தயாராக உள்ளது. இந்தப் படத்தில் விக்ரம் நடித்துள்ள 'ஜான்/ஜோசுவா' கதாபாத்திரம், ஒரு ஸ்டைலான ஸ்பை த்ரில்லராகப் பல நாடுகளைக் கடந்து பயணிக்கிறது.

இந்தப் படம் மட்டும் வெளியானால், விக்ரமின் மார்க்கெட் பழையபடி உச்சத்தைத் தொடும். ரசிகர்களிடையே இந்தப் படத்திற்கு இருக்கும் எதிர்பார்ப்பு, ரிலீஸ் ஆகும் நாளில் மிகப்பெரிய வசூல் சாதனையைப் படைக்க அதிக வாய்ப்புள்ளது.

விக்ரமின் அடுத்த பிளான் என்ன என்று பார்த்தால், அது இன்னும் ஆச்சரியமாக இருக்கிறது.

சியான் 63: 'இருமுகன்' படத்திற்குப் பிறகு மீண்டும் இயக்குநர் ஆனந்த் சங்கருடன் விக்ரம் இணையப்போவது உறுதியாகியுள்ளது. இது ஒரு ஃப்ரெஷ் ஆன ஆக்ஷன் கதையாக இருக்கும்.

போடி ராஜ்குமார் படம்: சாந்தி டாக்கீஸ் தயாரிப்பில் போடி ராஜ்குமார் இயக்கத்தில் ஒரு புதிய ப்ராஜெக்ட்டிலும் விக்ரம் கமிட் ஆகியுள்ளார்.

விஷ்ணு எடவன் கூட்டணி: லோகேஷ் கனகராஜின் உதவியாளரான விஷ்ணு எடவன் இயக்கத்தில் விக்ரம் ஒரு படத்தில் நடிக்கப் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இது 'டார்க்' சினிமா ரசிகர்களுக்கு ஒரு பெரிய விருந்தாக இருக்கும்.

விக்ரம் இப்போது தனது 60 வயதை நெருங்கிக்கொண்டிருந்தாலும், இளம் நடிகர்களுக்குப் போட்டியாக உடலமைப்பை மெயின்டைன் செய்து வருகிறார். 2026–ல் மட்டும் அவரது மூன்று படங்கள் வெளியாவதற்கு வாய்ப்புள்ளதால், இந்த ஆண்டு கோலிவுட்டில் ஒரு சியான் மேஜிக் நடப்பது உறுதி.

# ஏஐ-யால் பறிபோகும் வேலைகள்!




புதுடெல்லி, ஏப். 24–

ஏஐ எனப்படும் செயற்கை நுண்ணறிவு நாம் நினைத்து பார்க்க முடியாத பல முன்னேற்றங்கள் அடைந்துக்கொண்டு இருக்கிறது. கடந்த நூற்றாண்டை கம்ப்யூட்டர் யுகம் என்று சொல்லப்பட்ட நிலையில் தற்போது ஏஐ யுகம் என சொல்லும் காலம் வந்துள்ளது. செயற்கை நுண்ணறிவு அனைத்து இடங்களிலும் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. பல தொழில்நுட்பங்கள் செயற்கை நுண்ணறிவை கொண்டு இயக்கப்படுவதால், பலரின் வேலைகளும் கேள்விக்குறியாகி உள்ளது.

ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம் நடத்திய சமீபத்திய ஆய்வில், அடுத்த 10 ஆண்டுகளில் செயற்கை நுண்ணறிவு (AI) காரணமாக 47 சதவீத வேலைகள் அமெரிக்காவில் குறைக்கப்படலாம் என்று குறிப்பிட்டுள்ளது. மேலும், இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளிலும் இந்த நிலை ஏற்படலாம் என்று கணித்துள்ளனர். குறிப்பாக ஐடி துறையில் அதிக அளவு வேலை இழப்புகள் ஏற்பட்டு வருகின்றன. உலகின் முன்னணி தொழில் நிறுவனங்களும் ஆட்குறைப்பை மேற்கொண்டு வருகின்றன.

அமேசான், ஆரக்கிள் போன்ற நிறுவனங்களும் ஆட்குறைப்பு நடவடிக்கையை எடுத்து வரும் நிலையில், டெக் உலகில் டாப் நிறுவனங்களில் ஒன்றாக இருக்கு மெட்டாவும் ஆட்குறைப்பை கையில் எடுத்துள்ளது. தனது மொத்த பணியாளர்களில் சுமார் 10% பேரை, அதாவது 8,000க்கும் மேற்பட்டோரைக் பணி நீக்கம் செய்ய திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த அறிவிப்பு தொழில்நுட்ப துறையில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.நிறுவனம் வெளியிட்ட விளக்கத்தில், செயற்கை நுண்ணறிவு துறையில் முதலீடுகள் மற்றும் செலவினங்கள் அதிகரித்து வருவதால், நிறுவனத்தின் செலவுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொடர்ந்து சரிந்து வரும் தங்கம் விலை!



சென்னை, ஏப். 24–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.480 குறைந்து ரூ.1,12,800–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.60 குறைந்து ரூ.14,100–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.265–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 65 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.




# மேற்கு வங்காளத்தில் பா.ஜ.க மகத்தான வெற்றி பெறுவது உறுதி- பிரதமர் மோடி!



மேற்கு வங்காளம், ஏப். 24–

மேற்கு வங்காளத்தில் நடந்த முதற்கட்ட தேர்தலில் அதிகமான வாக்குகள் பதிவாகி இருப்பது பா.ஜ.கவின் மகத்தான வெற்றியை உறுதி செய்வதாக பிரதமர் மோடி தெரிவித்து உள்ளார். 294 சட்டசபை தொகுதிகளை கொண்ட மேற்கு வங்காளத்தில் முதற்கட்டமாக 152 இடங்களுக்கு நேற்று தேர்தல் நடந்தது. இதில் வரலாறு காணாத வாக்குப்பதிவு காணப்பட்டது.

இதுதொடர்பாக பிரதமர் மோடி மகிழ்ச்சியும், வெற்றி குறித்த நம்பிக்கையும் வெளியிட்டு உள்ளார்.

அங்கு 2–வது கட்ட தேர்தலுக்காக நாடியா மாவட்டத்தில் நேற்று பிரசாரத்தில் ஈடுபட்ட அவர், கிருஷ்ணாநகரில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசும்போது இது தொடர்பாக கூறியதாவது:–

மேற்கு வங்காளத்தில் கடந்த 50 ஆண்டு தேர்தல் வரலாற்றில் இந்த முறைதான் வன்முறைகள் மிகக்குறைவாக நடந்துள்ளன.

முதற்கட்ட தேர்தலில் இன்று (நேற்று) இதுவரை நடந்துள்ள வாக்குப்பதிவு தொடர்பாக எனக்கு கிடைத்த தகவல்படி, இது ஒரு மாற்றத்துக்கான தேர்தலாக இருக்கப்போகிறது.

எங்கெல்லாம் மக்கள் எழுச்சியாக வந்து வாக்களிக்கிறார்களோ, அங்கெல்லாம் பா.ஜ.க வென்று வருகிறது. அந்தவகையில் மேற்கு வங்காளத்திலும் பா.ஜ.க மகத்தான வெற்றி பெறுவதையே இது உறுதியாக காட்டுகிறது.

மேற்கு வங்காளத்தில் நான் தெருவோரக்கடையில் நொறுக்குத் தீனி சாப்பிட்டேன். ஆனால் அதன் காரணத்தை திரிணாமுல் காங்கிரசார் உணர்கிறார்கள்.

மாநிலத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் மேம்பாட்டுக்காக 10 உறுதிமொழிகள் அறிவித்து இருக்கிறேன். மோடியின் உறுதிமொழி என்றால் தானாகவே உறுதிமொழிகள் நிறைவேற்றப்படும் என்று பொருள்.

இந்த முறை மாநிலத்தின் பல மாவட்டங்களில் திரிணாமுல் காங்கிரசால் ஒரு இடம் கூட வெற்றி பெற முடியாது. ஊடுருவல்காரர்களுக்கு உதவுதல் என்ற திரிணாமுல் காங்கிரசின் மந்திரத்துக்கு முடிவு கட்ட வேண்டும்.

ஏனெனில் இது இந்த நிலத்துக்கு எதிரானது. மாநிலத்தில் பா.ஜ.க ஆட்சிக்கு வந்த பிறகு. குடியுரிமை திருத்தச் சட்டத்தின் கீழ் குடியுரிமை வழங்குவது வேகம் பெறும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட திமுக வேட்பாளர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை!



சென்னை, ஏப். 24–

சென்னை: சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட திமுக வேட்பாளர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை நடத்தினார். தமிழ்நாட்டில் சட்டப்பேரவைக்கான தேர்தல் ஒரே கட்டமாக நேற்று காலை 7 மணிக்குத் தொடங்கி, மாலை 6 மணியளவில் முடிவடைந்தது. தமிழகத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு 85 சதவிகிதம் வாக்குகள் பதிவாகியிருப்பதாகத் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது. . இந்நிலையில் சென்னை அண்ணா அறிவாலயத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் திமுக சார்பாக போட்டியிட்ட வேட்பாளர்களுடன் ஆலோசனை நடத்தினார். அடுத்தகட்ட நடவடிக்கைகள், வாக்கு எண்ணிக்கை தொடர்பான ஏற்பாடுகள், தற்போதைய சூழல் என பல்வேறு விவரங்களை அவர்களிடம் கேட்டறிய வாய்ப்பு உள்ளது.

# ஐடி ரெய்டு: ஆதாரம் வெளியிட்ட செல்வப்பெருந்தகை...!



சென்னை, ஏப். 24–

ஐடி ரெய்டு சோதனை நடத்தப்பட்டது தொடர்பாக வீடியோ ஆதாரம் வெளியிட்டு தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை பேட்டி அளித்துள்ளார்.

சோதனை நடத்தவில்லை என வருமான வரித்துறையினர் மறுத்திருந்த நிலையில் ஆதாரம் வெளியிட்டு செல்வப்பெருந்தகை பேட்டி அளித்துள்ளார். அப்போது அவர் கூறியதாவது:–

திமுக நிர்வாகி படப்பை மனோகரன் வீட்டில் உள்ள எனது அலுவலகத்தில் வருமான வரித்துறை சோதனை செய்தனர்.

வருமான வரித்துறை சோதனை என்ற பெயரில் துன்புறுத்தினர். சோதனை நடத்தியதற்கான ஆதாரம் உள்ளது.

வருமான வரித்துறை சோதனை நடத்தியது தவறில்லை. அதை வெளிப்படையாக கூற மறுப்பது ஏன்?

வருமான வரித்துறை சோதனையால் தான் ராகுல் காந்தி பரப்புரைக்கு என்னால் செல்ல முடியவில்லை.

எனது ஆதரவாளர்களான பல நிர்வாகிகளின் வீடுகளில் வருமான வரித்துறையினர் சோதனை நடத்தினர்.

சோதனை என்ற பெயரில் வருமான வரித்துறையினர் அட்டூழியம் செய்கின்றனர்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

# குடமுழுக்கில் தமிழ் வேள்வி



. குடமுழுக்கில் தமிழ் வேள்வி ஆசிரியர் கலந்து கொள்வது தொடர்பாக:– ஆலயங்களில் ஓதுவார்கள் திருமுறைகள் பாடுவதற்காக பணி செய்கிறார்கள். ஆனால் இதுவரை பாரம்பரியமாக கேள்விப்படாத ஒரு தமிழ் வேள்வி ஆசிரியர் என்னும் பெயரில் இப்போது குறிப்பிட்ட பிறகே தான் ஆலயங்களில் யாக குண்டத்தில் அமர்ந்து பணி செய்ய விரும்புகிறார்கள் என்பதே கேள்விப்படாத ஒன்றாக புதுமையாக உள்ளது. இந்த தமிழ் வேள்வி ஆசிரியர் எனும் பெயர் உலகிற்கு தெரியவருகிறது.

திருமுறைகள் உருவான காலத்திற்கு முன்பாகவும், சம காலத்திலும், பிற்காலத்திலும், தற்காலத்திலும் சைவாகமக் கோவில்களில் சைவாகம அடிப்படையிலேயே பிரதிஷ்டைகளும் பூஜைகளும், உற்சவங்களும் பிராயச்சித்தங்களும் கும்பாபிஷேகங்களும் இன்று வரை தொன்றுதொட்டு நடந்து வருகின்றது. ஆலயங்களில் சைவாகம பூஜைநளையும் அதன் சிறப்புகளைப் பற்றி பின்னாளில் வந்த சந்தானாச்சாரியார்களும், தபஸ்வி களும் அதே தேவாரத் திருமுறைகளில் கூறுகிறார்கள்.

அப்பேற்பட்ட சிவ சாயுஜ்யம் அடைந்த ஆசாரியர்களின் கருத்துக்கு மாற்றாக , அவர்களின் இறை கருத்துக்கு வேறாக நடக்க விரும்புவது இறைஞானம் உடைய உலகிற்கு ஏற்புடையதல்ல.

பொதுவாகவே ஆலயங்களில் கும்பாபிஷேகம் என்பது ஆகமத்தில் சொல்லும் விதத்தில் மட்டுமே ஆலயங்களின் இடம் தேர்வு செய்து அதை கட்டி முடிப்பதற்கு முன்பாகவும் கட்டி முடித்த பிறகு அல்லது திருப்பணிகள் நிறைவடைந்த பிறகு என்ன மாதிரி சடங்குகளும் மந்திரங்களும் எந்தெந்த தெய்வங்களுக்கு எந்தந்த இடத்தில் யாகசாலை அமைத்து என்ன மந்திரம் யார் யார் எங்கெங்கு அமர்ந்து இருந்து சொல்லப்பட வேண்டும் என்று சடங்குகள் வாரியாக எல்லா ஆகமக் கோவில்களிலும் செய்விக்க வேண்டும் என்று விரிவாக சைவமாக மூல நூல்களில் சில ஆயிரம் வருடங்களுக்கு முன்பே இறைவனால் உபதேசிக்கும் பட்டு அவை ரிஷிகளால் கேட்கப்பட்டு அதன் வண்ணமே நடக்க வேண்டும் என்று சைவ பக்தர்களுக்கு அருளப்பட்டுள்ளது. அதன்படியே இன்று வரை அரசர்களின் ஆட்சிக் காலம் முதல் நவீன ஜனநாயக காலம் இன்றுவரை தொன்றுதொட்டு பாரம்பரியமாக பழக்க வழக்கங்கள் அடிப்படையிலும் அந்தந்த கோவில்களின் ஸ்தல புராணங்களின் அடிப்படையிலும் அந்தந்த ஆலயங்களின் சிவாச்சாரியார்கள் நடத்திக் கொண்டு வருகிறார்கள்.

ஆனால் திருமுறைகள் வாசித்தல் அல்லது பாடுதல் என்பது தானே தவிர, செய்முறை சடங்குகள் என்ன மந்திரத்தால் எங்கு எப்படி யாரால் எந்த திருமேனிக்கு செய்வித்தல் வேண்டும் எனும் செய்முறை சடங்குகள் பற்றிய விவரங்கள் சொல்லப்படவில்லை என்பது “உள்ளங்கை நெல்லிக்கனி”.

திருமுறைகள் வழியில் சடங்குகள் செய்ய எந்த வித வழிகாட்டுதல்கள் தேவாரத் திருமுறைகளில் கூறப்படவில்லை. ஏனென்றால் இறைவனால் அருளப்பட்ட சைவாகமங்களில் மட்டும் தான் சரியை, கிரியை எனும் பகுதியில் சடங்குகள் மற்றும் வழிபாட்டின் விதிமுறைகள், வழிகாட்டுதல்கள் சொல்லப்பட்டுள்ளது.

இந்த ஆகம விதியின் அடிப்படையில் மட்டுமே ஆகமக் கோவில்களில் திருப்பணிகள் நிகழ்த்தி நித்திய நைமித்திக, உற்சவங்கள், பிராயச்சித்த பூஜைகள் நிகழ்த்த வேண்டும். இதை அனைத்து நீதிமன்றங்களும் மேற்கோள் காட்டி தீர்ப்புகள் வழங்கியுள்ளன. Reli–gious affairs எனும் மதச் சடங்குகள் தொடர்பானவற்றை சிவாச்சாரியார்கள் தான் முடிவு செய்யவேண்டும் என்பது இறைவனின் உத்தரவும் மேதகு அரசியலமைப்பு சாசனத்தின் அடிப்படையில் தங்களது தீர்ப்பில் வலியுறுத்தி உள்ளனர்.

மேலும் ஒரு கும்பாபிஷேக காலத்தில் யாகசாலையில் தேவாரத் திருமுறைகளை நன்கு கற்றறிந்த ஒதுவார்கள் யாகசாலை முன்பாக இருந்து ஓதுவார்கள் (பாடுவார்கள்). அதிலும் அந்தந்த கோவிலுக்கு உரிய இனாம், மிராஸி, ஓதுவார் என்பவர்களுக்கு அந்த கோவில் தொடர்புடைய திருவிழாக்களில் இன்றும் பரிவட்டம், மாலை மரியாதை இன்றும் செய்விக்கப்படுகிறது.

அவர்களுடன் ஆலய ஓதுவார்கள் யாகசாலை முன்பாக வழக்கப்படி பாடுவார்கள். இவர்களைத் தவிர வேறு நபர்களையாக ( வேள்வி) குண்டத்தில் அமர்ந்து வேள்வி செய்விப்பது என்பது சைவமாக மத்தில் சொல்லப்படவில்லை , நடைமுறை பழக்க வழக்கத்திலும் இல்லை.

மேலும் சில விஷயங்களை குறிப்பிட விரும்புகிறேன். அது என்னவென்றால், உச்ச நீதிமன்றம், உயர் நீதிமன்றங்கள் முதல் பல கீழமை நீதிமன்றங்கள் வரை ஆலயங்களின் சடங்குகள் பூஜைகள் நடைமுறைகள் தொடர்பாக அந்தந்த ஆலயங்களின் ஆகம அடிப்படையிலேயே அந்தந்த ஆகம விஷயத்தில் அனுபவமும் நல்லறிவும் உடைய அந்தந்த ஆலய அர்ச்சகர்களே முடிவு எடுக்க வேண்டும் என்று பல்வேறு தீர்ப்புகளில் கூறப்பட்டுள்ளது.

மேலும் அரசியலமைப்பு சாசனம் வழங்கப்பட்ட ( religious ights) மத உரிமைகளாகும். ஒவ்வொரு ஆகமக் கோவிலகளுக்கும் ஒவ்வொரு விதமான பாரம்பரிய பழக்கவழக்கங்கள் உடையது. (Each temple has its own customary practices) அதை மீறக் கூடாது என்று நீதிமன்றங்கள் தொடர்ச்சியாக இன்று வரை வலியுறுத்தி வருகின்றன.

இப்படிக்கு,
எஸ். சங்கரன்,
வழக்கறிஞர்.
மதுரை.

# கோடை விடுமுறையையொட்டி, இந்தியா முழுவதும் 18000 சிறப்பு ரயில்கள் இயக்கம்! இந்தியன் ரயில்வே அறிவிப்பு...!






சென்னை, ஏப். 24–

கோடை விடுமுறையையொட்டி, பொதுமக்கள் சுற்றுலா ஸ்தலங்களுக்கு செல்லும் வகையில், இந்தியா முழுவதும் 18,262 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக மத்திய ரயில்வ அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

இதில், முதல்கட்டமாக இந்தியன் ரயில்வே நாடு முழுவதும் 908 சிறப்பு ரயில்களை இயக்குவதாக அறிவித்துள்ளது. இதில், தமிழ்நாட்டைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் தெற்கு ரயில்வேக்கு 72 சிறப்பு ரயில்கள் (558 பயணங்கள்) ஒதுக்கப்பட்டுள்ளன. கோடை விடுமுறைக் காலத்தில் பயணிகளின் பயணத்தை எளிதாகவும், வசதியாகவும் மாற்றுவதற்காக, நாடு முழுவதும் அதிக எண்ணிக்கை யிலான சிறப்பு ரயில் சேவைகளுக்கு ரயில்வே நிர்வாகம் ஒப்புதல் அளித்துள்ளது.

இதுகுறித்து, இந்திய ரயில்வே வெளியிட்டுள்ள அறிக்கையின்படி, முதல்கட்டமாக ஏப்ரல் 15, 2026 முதல் ஜூலை 15, 2026 வரையிலான மூன்று மாத காலத்தில், பயணிகளின் கூட்ட நெரிசலைச் சமாளிக்க மொத்தம் 908 கோடைக்கால சிறப்பு ரயில்கள் மூலம் 18,262 பயணங்கள் (trips) இயக்கப்பட உள்ளன.

இதில், 660 ரயில்கள் மூலம் 11,294 பயணங்களுக்கான அறிவிப்பு ஏற்கனவே வெளியிடப்பட்டுவிட்டது. இதனால், பயணிகள் முன்கூட்டியே தங்கள் பயணத்தைத் திட்டமிட்டு, டிக்கெட்டுகளை முன்பதிவு செய்துகொள்ள முடியும்.

விடுமுறை, பண்டிகைக் காலங்களில் ஏற்படும் கூட்ட நெரிசலைச் சமாளிக்க இந்திய ரயில்வே முன்கூட்டியே திட்டமிட்டு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. இந்த கோடைக்கால சிறப்பு ரயில்கள், இந்திய ரயில்வேயின் அனைத்து முக்கிய மண்டலங்களிலும் இயக்கப்படுவதால், அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான இணைப்பு வசதி கிடைக்கும்:

கோடைகால சிறப்பு ரயில்களின் முழு லிஸ்ட்

* தெற்கு மத்திய ரயில்வே (South Central Railway): 124 ரயில்கள் (1,184 பயணங்கள்) அனுமதிக்கப்பட்டு, 76 ரயில்கள் (324 பயணங்கள்) அறிவிக்கப்பட்டுள்ளன.

* மேற்கு ரயில்வே (West–ern Railway): 106 ரயில்கள் (2,078 பயணங்கள்) அனுமதிக்கப்பட்டு, 92 ரயில்கள் (1,667 பயணங்கள்) அறிவிக்கப்பட்டுள்ளன.

* வடமேற்கு ரயில்வே (North Western Railway): 76 ரயில்கள் (2,245 பயணங்கள்) அனுமதிக்கப்பட்டு, 62 ரயில்கள் (1,878 பயணங்கள்) அறிவிக்கப்பட்டுள்ளன.

* வடக்கு ரயில்வே (North–ern Railway): 76 ரயில்கள் (2,090 பயணங்கள்) அனுமதிக்கப்பட்டு, 56 ரயில்கள் (1,535 பயணங்கள்) அறிவிக்கப்பட்டுள்ளன.

* மத்திய ரயில்வே (Central Railway): 74 ரயில்கள் (3,082 பயணங்கள்) அனுமதிக்கப்பட்டு, 70 ரயில்கள் (2,238 பயணங்கள்) அறிவிக்கப்பட்டுள்ளன.

### தெற்கு ரயில்வே சிறப்பு ரயில்கள்

* தெற்கு ரயில்வே (South–ern Railway): 72 ரயில்கள் (558 பயணங்கள்) அனுமதிக்கப்பட்டு, 38 ரயில்கள் (133 பயணங்கள்) அறிவிக்கப்பட்டுள்ளன. நமது தமிழ்நாட்டை பொறுத்தவரை சென்னையில் இருந்து தென் மாவட்டங்கள் உள்பட பல்வேறு இடங்களுக்கு சிறப்பு ரயில்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

* கிழக்கு மத்திய ரயில்வே (East Central Railway): 64 ரயில்கள் (2,711 பயணங்கள்) அனுமதிக்கப்பட்டு, 38 ரயில்கள் (1,060 பயணங்கள்) அறிவிக்கப்பட்டுள்ளன.

* வடக்கு மத்திய ரயில்வே (North Central Railway): 54 ரயில்கள் (1,163 பயணங்கள்) அனுமதிக்கப்பட்டு, 46 ரயில்கள் (688 பயணங்கள்) அறிவிக்கப்பட்டுள்ளன.

* வடகிழக்கு ரயில்வே (North Eastern Railway): 52 ரயில்கள் (814 பயணங்கள்) அனுமதிக்கப்பட்டு, 34 ரயில்கள் (477 பயணங்கள்) அறிவிக்கப்பட்டுள்ளன.

* கிழக்கு கடற்கரை ரயில்வே (East Coast Rail–way): 28 ரயில்கள் (410 பயணங்கள்) அனுமதிக்கப்பட்டு, 18 ரயில்கள் (88 பயணங்கள்) அறிவிக்கப்பட்டுள்ளன.

* மேற்கு மத்திய ரயில்வே (West Central Railway): 28 ரயில்கள் (408 பயணங்கள்) அனுமதிக்கப்பட்டு, 18 ரயில்கள் (192 பயணங்கள்) அறிவிக்கப்பட்டுள்ளன. இதேபோல் பல்வேறு மண்டல ரயில்வேகளையும் சேர்த்து மொத்தம் 908 சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

### தெற்கு ரயில்வேயில் தமிழ்நாட்டுக்கு எத்தனை ரயில்கள்?

தமிழ்நாட்டைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் தெற்கு ரயில்வேக்கு 72 சிறப்பு ரயில்கள் (558 பயணங்கள்) ஒதுக்கப்பட்டுள்ளன.

இதில் பெரும்பான்மையான ரயில்கள் சென்னையில் இருந்து மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கோவை போன்ற தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களை இணைக்கும் வகையில் இயக்கப்படவுள்ளன. மேலும் சென்னை எழும்பூர் திருநெல்வேலி, தாம்பரம் நாகர்கோவில், சென்னை சென்ட்ரல் கோயம்புத்தூர் போன்ற வழித்தடங்களில் அதிகப்படியான சிறப்பு ரயில்கள் இயக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# துபாய் புறப்பட்டார் உதயநிதி; கொடைக்கானல் செல்கிறார் ஸ்டாலின்!



சென்னை, ஏப். 24–

சட்டசபை தேர்தல் முடிந்த நிலையில், குடும்பத்தினருடன் நாளை (ஏப்ரல் 25) கொடைக்கானலுக்கு முதல்வர் ஸ்டாலின் செல்கிறார். உதயநிதி வெளிநாடு சுற்றுப்பயணம் புறப்பட்டார்.

தமிழக சட்டசபை தேர்தலுக்கான அறிவிப்பு, கடந்த மார்ச் 15ம் தேதி வெளியானது. உடனே, வேட்பாளர் பட்டியலை வெளியிட்டு, தேர்தல் பிரசாரங்களில் தலைவர்கள் இறங்கினர். தற்போது தேர்தல் முடிந்ததும், அரசியல் கட்சி தலைவர்கள் பலரும் பல்வேறு இடங்களுக்கு சுற்றுலா செல்லவும், ஓட்டு எண்ணிக்கைக்கு ஓரிரு நாள் முன்னதாக தொகுதிகளுக்கு திரும்பவும் திட்டமிட்டுள்ளனர்.

தேர்தல் பணிகள் முடிந்ததும் அரசியல் கட்சி தலைவர்கள் வெளிநாடுகளுக்கு டூர் செல்வது வழக்கமாக கொண்டு இருக்கின்றனர்.

அந்த வகையில் துபாய், லண்டன் உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு துணை முதல்வர் உதயநிதி, அவரது மனைவி, மகளுடன் புறப்பட்டு சென்றார். குடும்பத்தினருடன் (ஏப்ரல் 25) கொடைக்கானலுக்கு முதல்வர் ஸ்டாலின் செல்கிறார்.

# ஓட்டுப்பதிவு அதிகரிப்பு ஏன்? மக்களின் ஆர்வமா? எஸ்.ஐ.ஆர் காரணமா?



சென்னை, ஏப். 24–

தமிழக சட்டசபை தேர்தலில் இதுவரை இல்லாத அளவிற்கு ஓட்டு சதவீதம் அதிகரித்ததற்கு மக்களின் ஆர்வம் காரணமா அல்லது எஸ்.ஐ.ஆர் பணிகள் காரணமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

தமிழக சட்டசபைக்கான தேர்தல் நேற்று (ஏப்.,23) 234 தொகுதிகளிலும் நடந்து முடிந்தது. இதில், இதுவரை இல்லாத அளவாக முதன்முறையாக எண்பது சதவீதத்தை தாண்டி, 85.03 சதவீத ஓட்டுகள் பதிவாகி அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

இது திமுக அரசின் செயல்பாடுகள் தொடர, மக்கள் விரும்பியே ஓட்டளித்ததாக திமுக.,வினரும், ஆளும்கட்சி மீது அதிருப்தி ஏற்பட்டதால் ஆட்சி மாற்றத்தை விரும்பி மக்கள் ஓட்டளித்ததாக அதிமுக.,வினரும், புதிய கட்சிக்கு வாய்ப்பளிக்கும் விதமாக விஜய் அலை வீசியதால் தான் அதிகளவு சதவீதம் கூடியுள்ளதாக த.வெ.க.,வினரும் என ஆளுக்கு ஒரு காரணத்தை சொல்லி வருகின்றனர்.

உண்மையில் மக்களின் ஆர்வம் தான் ஓட்டு சதவீத அதிகரிப்புக்கு காரணமா அல்லது எஸ்.ஐ.ஆர் திருத்தம் காரணமா என ஆராயப்படுகிறது. கடந்த 2021 சட்டசபை தேர்தலில், மொத்தம் இருந்த, 6.29 கோடி வாக்காளர்களில், 4.63 கோடி பேர், அதாவது 73.63 சதவீதம் பேர் ஓட்டு போட்டனர்.

இறந்தவர்கள், போலி முகவரி, ஒன்றிற்கு மேற்பட்ட பதிவுகள், ஊர் மாறியவர்கள், மாநிலம் விட்டு சென்றவர்கள் என அனைத்தும் நீக்கப்பட்டன. இப்பணிகளுக்கு பின், மொத்தம் 5.73 கோடி வாக்காளர்கள் ஓட்டளிக்க தகுதி பெற்றிருந்தனர். இதில், 18 வயதான புதிய வாக்காளர்கள் மட்டும் 14,59,039 பேர். இந்த எண்ணிக்கை அடிப்படையில் நேற்று நடந்த தேர்தலில், சராசரியாக 85.03 சதவீத ஓட்டுகள் பதிவாகியுள்ளன. அதாவது, மொத்தமுள்ள 5.73 கோடி வாக்காளர்களில், 4.83 கோடி பேர் ஓட்டளித்துள்ளனர். அதாவது கடந்த தேர்தலை விட, கூடுதலாக 22 லட்சம் பேர் ஓட்டுப் போட்டுள்ளனர்.

**புள்ளிவிவரம் சொல்வது என்ன?**

2001 முதல் தமிழகத்தில் ஒவ்வொரு சட்டசபை தேர்தலிலும் ஓட்டு சதவீதம் ஏற்ற, இறக்கமாக இருந்தாலும், பதிவான ஓட்டுகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே தான் இருக்கின்றன. அதாவது, 2001ல் 2.80 கோடி ஓட்டுகள் பதிவாகி இருந்தன.

2006ல் 3.29 கோடி (49 லட்சம் அதிகம்), 2011ல் 3.69 கோடி (40 லட்சம் அதிகம்), 2016ல் 4.32 கோடி (63 லட்சம் அதிகம்), 2021ல் 4.63 கோடி (31 லட்சம் அதிகம்), 2026ல் 4.85 கோடி (22 லட்சம் அதிகம்) வாக்காளர்கள் ஓட்டளித்துள்ளனர்.

அதாவது ஒவ்வொரு தேர்தலிலும் குறைந்தது 30 முதல் 40 லட்சம் ஓட்டுகள் அதிகரித்து வந்த நிலையில், இந்த தேர்தலில் வெறும் 22 லட்சம் வாக்காளர்களே அதிகம் ஓட்டளித்துள்ளனர். அதிலும், முதல் தலைமுறை வாக்காளர்களே 14.59 லட்சம் பேர்.

இந்த புள்ளிவிவரங்களின் படி பார்த்தால், எஸ்.ஐ.ஆர் பணி காரணமாக மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை குறைந்ததே சதவீதம் அதிகமாக தெரிய காரணம். அதே நேரம், மற்ற தேர்தல்களை ஒப்பிடுகையில் இந்த தேர்தலில் அதிகரிக்கும் ஓட்டுகளின் எண்ணிக்கை சற்றே குறைவு என்றே சொல்லலாம்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020